# புத்தளம் பிரதேச சபை

# புத்தளம் மாவட்டம்

------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

------------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு புத்தளம் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 மற்றும் 2014 ஆண்டுகளின் போது உதவிகளாகக் கிடைத்திருந்த ரூபா 4,211,520 தொகை பெறுமதியான 04 வாகனங்களை நிலையான சொத்துக்களின் கீழும், கூட்டுத்தொகை ரூபா 2,326,850 இற்கான கடன்கொடுத்தோர், கடன்கொடுத்தோர் கணக்கிலும் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 2,197,367 இற்கான சபை ஊழியர்களின் சம்பள மீளளிப்பு கிடைக்க வேண்டிய கணக்கிலும் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மதுரங்குளி வாராந்த சந்தை தொடர்பாக பெற்றிருந்த கடன் தொகையில் 2014 முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டுகள் தொடர்பாக செலுத்தப்பட்ட ரூபா 50,660 இற்கான வட்டியினை வட்டிக் கணக்கிற்கு கணக்கீடு செய்து இருக்காமையால் அக் கணக்கு மற்றும் கடன் கணக்கு அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் 04 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,301,872 ஆகக் காணப்பட்டதுடன், துணைப் பதிவேடுகளின் பிரகாரம் அவற்றின் கூட்டுத்தொகை ரூபா 3,607,335 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 305,463 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 19,810,505 தொகை எனினும், அத் திகதியில் உள்ளவாறு அந் நிதியத்தின் மீதியை உறுதிப்படுத்தும் கடிதத்தின் பிரகாரம் அது ரூபா 30,941,094 ஆகும்.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

---

பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 10,435,712 ஆகக் காணப்பட்டதுடன், 01 வருட காலத்தை மிகைத்துள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,650,175 ஆகும். பல வருட காலம் முதல் அசையாது காணப்படும் நடைமுறை சொத்துக்களின் பெறுமதி ரூபா 846,188 ஆகும்.

1.3.4 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

---

அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட பதவியணிக் கடன் ரூபா 3,240,743 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் சேவையை விட்டுச் செல்லல், இடமாற்றம் செல்லல், இறப்பு மற்றும் ஓய்வுப் பெற்ற 14 ஊழியர்களிடம் ரூபா 46,669 தொகை ஒன்று பல வருட காலமாக அறவிடப்படாது காணப்பட்டது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

03 கணக்கு விடயங்கள் தொடர்பாக போதியளவு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 23,647,411 இற்கான கொடுக்கல் வாங்கல்களை திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 129(2)(அ) மற்றும் (ஊ) இன் பிரகாரம் பிரதேச சபைக்குக் கிடைக்க வேண்டிய வருமானங்கள் முறைப்படி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அத்துடன் சட்டத்தின் பிரிவு 150(4) இன் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் வர்த்தக நிலையங்களின் அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தத் தவறும் நபர்கள் தொடர்பாக தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் சட்டத்தின்

பிரிவு 158 இன் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வீத வரி மற்றும் ஏக்கர் வரி செலுத்தத் தவறும் நபர்களுக்கு சொந்தமான அசையும் சொத்துக்களை தடைசெய்து நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காகவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2008 ஆண்டு முதல் காணப்படும் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 9,196,130 பெறுமதியான 20 வைப்புக்கள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவையின் 571(1)(2)(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,401,063 தொகையாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,978,645 ஆகும். மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது முறையே ரூபா 35,900,085 உம் மற்றும் ரூபா 9,159,410 இற்கான மூலதன உதவி மற்றும் முறையே ரூபா 35,446,466 உம் மற்றும் ரூபா 13,859,585 இற்கான மூலதன செலவுகளை கணித்த பின்னர் மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது ரூபா 2,947,444 வும் மற்றும் முன்னைய ஆண்டின் ரூபா 2,721,530 இற்கான பற்றாக்குறை ஒன்று ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டின் நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் மேலும் ரூபா 225,914 இற்கான வீழ்ச்சி ஒன்று ஏற்பட்டுள்ளது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது தனிப்பட்ட சம்பளங்கள் தவிர ஏனைய மீண்டுவரும் செலவு விடயங்களின் மதிப்பீட்டு பெறுமதியாகிய ரூபா 20 மில்லியனை மிகைத்து ரூபா 4.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அம் மிகைத்தல் சதவீதமாக கணித்த போது மொத்தமாக நூற்றிற்கு 23 ஆகும். ஆண்டிற்கான மூலதன செலவு ஏற்பாட்டுத் தொகையான ரூபா 19.1 மில்லியனை மிகைத்து ரூபா 16.3 மில்லியனும் செலவிடப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

-----------------------------------

#### 2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2014 மதிப்பிடப்பட்ட | 2014 உள்ள வாறான | 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை | 2013 மதிப்பிடப்பட்ட | 2013 உள்ள வாறான | 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | வீதவரி | 1,480 | 1,292 | 3,259 | 3,225 | 1,141 | 2,801 |
| (ஆ) | வாடகை, குத்தகை | 10,000 | 8,832 | 4,785 | 976 | 5,733 | 2,848 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,500 | 4,336 | 904 | 6,975 | 4,059 | 908 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம்

2014 ஜனவரி முதல் ஜூலை மாதம் வரை நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 5,538,384 தொகையொன்று சபைக்கு கிடைத்திருந்தது. 2014 ஆகஸ்ட் முதல் திசெம்பர் இறுதி வரை காலப் பகுதி தொடர்பாக நீதி மன்றத் தண்டப் பணம் கிடைத்திருக்கவில்லை. அத்துடன் மீளாய்வாண்டிற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானம் என ரூபா 12,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.3.3 முத்திரைக் கட்டணம்

2014 ஜனவரி முதல் ஜூன் வரையான காலம் தொடர்பாக முத்திரைக் கட்டணமாக ரூபா 9,377,456 தொகையொன்று சபைக்குக் கிடைத்திருந்தது. பிரதான செயலாளரினால் தவறுதலாக ஒரே காலப் பகுதிக்காக ரூபா 4,688,728 வீதம் இரண்டு தடவைகள் முத்திரைக் கட்டணம் அனுப்பப்பட்டிருந்த போதிலும் சபையினால் அது தொடர்பாக பிரதான செயலாளருக்கு அறிவிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், 2014 ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் என சபையினால் ரூபா 7,000,000 தொகையொன்று மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சபை மதிப்பீடு செய்திருந்த தொகையை விட மிகையான தொகையொன்று ஆண்டின் முதல் அரை ஆண்டின் போது கிடைத்திருந்தது.

2.3.4 ஏனைய வருமானங்கள்

-------------------------------------

சபையின் இலக்கம் RS-1556 கொண்ட மோட்டார் கிரேடர் இயந்திரம் 2009 முதல் 2014 ஆண்டு இறுதி வரை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் ரூபா 725,971 இற்கான வாடகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.5 ஆதன வரி

-------------------

சபைக்குச் சொந்தமான 12 ஆதனங்களை 2014 ஆண்டிற்காக வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் குறைந்த விலை கூறலின் பிரகாரம் ரூபா 225,480 இற்கான வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 09 வருடங்களை அண்மித்த காலம் முதல் வீத வரிக்காக பெறுமதி மதிப்பீடு மேற்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வடமேல் ஆளுனரின் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் இன்றி தலைவரின் தாய்லாந்து சுற்றுலா தொடர்பாக இணைந்த படியாக ரூபா 161,587 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு பௌதீக வளங்கள்

-------------------------------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான ரூபா 4,467,800 தொகை பெறுமதியான சொத்துக்கள் பல வருட காலமாக பயன்படுத்தப்படாமலும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டது.

4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) வாகனக் கட்டுப்பாடு